# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII code of Criminal Procedure)

## IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR

## SESSIONS CASE NO. 562/2024

| Deposition of Witness for | Prosecution PW2<br>Defence<br>Court |
|---|---|

| | | |
|---|---|---|
| Name | : | Thiru. Venkatakrishnan |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 6th day of January, 2026.

( A1 to A6 are present )

<u>சாட்சி சத்தியப்பிரமானம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :</u>

**முதல் விசாரணை :**

நேரம் 12.35 மணி

நான் தற்போது வேப்பம்பட்டில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. நான் செக்யூரிட்டியாக குருவிமேடு IOCL Plant ல் வேலை செய்து

வருகிறேன். என்னை போலீசார் விசாரித்தார்கள். கையொப்பம் வாங்கினார்கள். எனக்கு தேதி ஞாபகமில்லை. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் முதலாவதாக உள்ள கையொப்பம் என் கையொப்பம் ஆகும். இரண்டாவதாக உள்ள கையொப்பம் யாருடையது என்பது எனக்கு தெரியாது. பார்வை மகஜரில் உள்ள முதலாவதாக உள்ள கையொப்பம் **அ.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**இந்நிலையில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அரசு வழக்கறிஞர் அனுமதி வேண்டுகிறார். சாட்சியை அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :</u>

04-08-2023 அன்று மீஞ்சூர் காவல் ஆய்வாளரிடம் நான் கடந்த 06-02-2023 ஆம் தேதி 11.00 மணியளவில் கொண்டக்கரையை சேர்ந்த ஜெயப்பிரகாஷ் என்பவரை சம்பவயிடமான IOCL Plant அருகிலிருந்து மோட்டார் சைக்கிலில் கடத்தி சென்ற வழக்கு சம்பந்தமான 04-08-2023 அன்று காவல் ஆய்வாளர் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் தயாரித்தார் என்றும், அதில் நானும், என் நண்பர் ரெட்டி என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்று வாக்குமூலத்தில் சொல்லிவிட்டு எதிரிகளுக்கு பவ்வியப்பட்டு பவ்வியப்பட்டு வழக்கு குறித்து எதுவும் தெரியாது என்று மாற்றி கூறுகிறேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.